**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நெடுஞ்சாலைத்துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற திரு.எம்.சுப்பிரமணியம் என்பவரின் மகன் திரு.சு.பாலாஜி இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றைத் தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை**

**அரசாணை (2ப) எண். 5**

**நாள் 08.02.2021.**
**சார்வரி, தை 26,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052.**

**படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25 கடித எண்.55860/நிர்.1(2)/2002, நாள் 19.08.2020.

---------

**ஆணை:–**

நெடுஞ்சாலைத்துறையில் செங்கல்பட்டு (நெ) கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த சென்னை (நெ) கிராமச் சாலைகள் உட்கோட்ட அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.எம்.சுப்பிரமணியம் என்பவர் 22.12.1998 அன்று பணியிடையே காலமானார். அவரது பணி அலுவலக உதவியாளர் பதவியில் 17.10.1970 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மறைந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.சு.மீனா என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில், அவரின் மகன் திரு.சு,பாலாஜி என்பவர் நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 05.08.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இயற்கை எய்திய நாளில், தனியரின் வயது 14 வருடம் 4 மாதம் ஆகும். பணிநியமனத்தின் போது தனியர் 35 வயது நிரம்பப் பெற்றுள்ளார். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வித் தகுதியினை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் பிரிவு 20(6)(b)–இன்படி தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பிக்கும் நாளில் குறும வயதான 18–னை நிறைவு செய்யவில்லை.

3. நெடுஞ்சாலைத்துறை, முதன்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்று அதன்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சு.பாலாஜி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், தனியர், விண்ணப்ப நாளன்று 18 வயது பூர்த்தியடையாததால் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் பிரிவு 20(6)(b) மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக பிரிவு 28(2) ஆகியவற்றை தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தளர்த்தியும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–க்கு தனியர் பொருட்டு விலக்களித்தும் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதும் இருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.727/க்யூ2/2021–1, நாள் 29.01.2021 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண்.2872/ஜி2/2021–1, நாள் 03.02.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை – 25.
திரு.சு.பாலாஜி, இளநிலை உதவியாளர் (நெ),
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25 வழியாக)

மாநில கணக்காயர், சென்னை–600018.

**<u>நகல்:–</u>**

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9,
தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
(C.No.7942/HM1/2020)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

செ. புஷ்பலதா
09/02/2021
**பிரிவு அலுவலர்**
9/2/2021